1978 பிப்ரவரி 27]

*252 வினா—திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு செய்தி—சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு ஸ்டூடியோவில் 1976, 1977 ஆண்டுகளில் எடுக்கப்பட்ட சினிமாப் படங்களின் எண்ணிக்கை என்ன ?

(ஆ) அதற்கு ஏற்பட்டுள்ள செலவு எவ்வளவு ?

(இ) தனிப்பட்டவர்கள் அரசு விழாக்களை படமெடுக்க அரசு அனுமதியைக் கோரி பெறவேண்டும் என்ற விதி ஏதும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :

(அ) மற்றும் (ஆ) :

	எண்ணிக்கை.	செலவு.
அரசு ஸ்டூடியோவில் தயாரிக்கப்பட்ட விளக்கப்படங்கள்.	9	ரூ. 2,99,770.

(இ) இல்லை.

*253 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு செய்தி—சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தமிழ்நாட்டு அரசினால் தொடங்கப்பட்டுள்ள 'அரசு ஸ்டூடியோ' தற்போது இலாபகரமாக இயங்குகிறதா ?

(ஆ) அதன் இன்றைய பணிகள் யாவை ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) இல்லை. அரசு ஸ்டூடியோ துவக்கத்திலிருந்தே இலாபகரமாக இயங்கியதில்லை.

(ஆ) அரசு ஸ்டூடியோவில் திரைப்படப்பிடிப்பு முறையினைப் பற்றி மாணவர்களுக்கு செயற்முறை பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு திரைப்படத் துறையின் விளக்கப்படங்களின் உள்புறப் படப்பிடிப்பிற்கும் இது உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. தனிப்பட்ட தயாரிப்பாளர்களின் படங்களின் உட்புற படப்பிடிப்பிற்கும் இது உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. தனிப்பட்ட தயாரிப்பாளர்களின் உட்புறப் படப்பிடிப்பிற்கும் இதனில் வசதிகள் செய்து தரப்பட்டு வருகின்றன.

[1978 பிப்ரவரி 27

திரு. என். கிட்டப்பா : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் சார்பில் நடத்தப்படும் அரசு ஸ்டூடியோ லாப கரமாக இயங்கவில்லை என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார் கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திரைப்படத் துறையில் நீண்ட காலம் நல்ல அனுபவம் வாய்ந்தவர்கள். எனவே அதை வருவாய் பெருவாரியான அளவில் வரக்கூடிய துறையாக இயங்க முடியாவிட்டாலும், நஷ்டத்திற்குள் நடைபெறாமல் தொடர்ந்து சீரிய முறையில் செயல்படுத்துவதற்கு ஏதாவது குறுகிய திட்டத்தை அரசு தயாரித்து வைத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் அதைப்பற்றி ஆராய்ந்து பரிசீலனை செய்து இதை நஷ்டம் இல்லாத அளவுக்கு நடத்தமுடியுமா என்பதற்காக ஆலோசனைகள் வழங்குவதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழுவின் யோசனைகள் அரசுக்கு வந்திருக்கின்றன. அதைப் பரிசீலனை செய்து விரைவில் அரசு முடிவு எடுக்க இருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதவிப் பிரமாணம் எடுத் ததை சினிமாப்படமாக எடுத்து வெளியிடப்பட்டிருக்கிறது. அந்த சினிமாப்படம் எடுத்தது, அரசு செய்தித்துறை மூலமாக எடுக்கப் பட்டதா அல்லது தனியார் துறையினர் மூலமாக எடுக்கப்பட்டதா, தனியார் துறை மூலம் எடுக்கப்பட்டது என்றால், அதற்கு அரசாங் கத்தினிடத்திலிருந்து அனுமதி பெற்றார்களா? அப்படி என்றால் அரசுக்கு ராயல்டி ஏதேனும் கொடுக்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : முதலமைச்சர் அவர்களின் பதவியேற்பு விழாவை செய்திப்படமாக அரசு செய்தித் துறை மூலமாக எடுத்து வெளியிடப்பட்டிருக்கிறது வழக்கம்போல். ஆனால் தனியார் துறையில் எடுத்து வெளி யிட்டிருக்கிறார்களா என்பது பற்றி அரசுக்கு தகவல் இல்லை. இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளை, அரசு நிகழ்ச்சிகளை படம் எடுப்ப தற்கு அரசின் அனுமதி பெறவேண்டுமென்ற விதி இதுவரை இல்லை.

திரு. ப. சந்திரன் : திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் போது, அமைச்சர்கள் மரம் நடுதல், குழாய்களைத் திறந்து வைத்தல், கடைகளை திறந்து வைத்தல், அமைச்சர்கள் நகரத் திலுள்ள தெருக்களை பெருக்குதல் போன்ற நிகழ்ச்சிகள் எல்லாம் திரைப்படங்களாக எடுக்கப்பட்டு காட்டினார்கள். அப்படிப் பட்ட நிகழ்ச்சிகள் இப்போது வருகின்ற திரைப்படங்களில் காட் டப்படுவதில்லையே, அரசு இதற்கென்று ஏதாவது உத்தரவு பிறப் பித்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

1978 பிப்ரவரி 27]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : அரசு இப்படிப் பட்ட காரியங்களுக்கு உத்தரவு பிறப்பித்து நடைபெறுவதில்லை. மக்களுக்கு தேவையான, மக்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்று இருக்கிற செய்திகளை, நிகழ்ச்சிகளை மட்டும் படம் பிடித்து காட்டுகின்ற முறைதான் இப்போது செயல்படுத்தப்பட்டு ருவகிறது.

திரு. கே. உச்சி : தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்புத் துறையால் எடுக்கப்படும் செய்திப் படங்கள் எல்லா கிராமங்களிலும் காட்டப்பட்டு வருகின்றனவா ? அப்படி என்றால், நீலகிரி மாவட்ட கிராமங்களிலும் காட்டு வதற்கு அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இப்போது அரசாங்கத்தால் தயாரிக்கப்படும், 35 எம்.எம். பிரதிகள் 65 எடுக்கப்படுகின்றன. இவை திரைப்பட கொட்டகைகள் மூலம் காண்பிக்கப்பட்டு வருகின்றன. திரைப்பட கொட்டகை வசதி இல்லாத இடங்களில் அரசினுடைய செய்தித்துறை மூல மாக 16 எம்.எம். படங்கள் காட்டப்பட்டு வருகின்றன. அப் படிப்பட்ட செய்திப் படம் எல்லாக் கிராமங்களுக்கும் காட்டு கின்ற முறை படிப்படியாக விரிவுபடுத்தப்பட இருக்கிறது என் பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 9-30]

திரு. போ. கோபாலன் : தலைவர் அவர்களே, சிறப்பான திரைப்படங்கள் தயாரிப்பதற்கு முன்வருபவர்களுக்கு அரசு ஸ்டுடி யோக்களில் கட்டணம் எதுவும் இல்லாமல் படம் எடுக்க அனு மதிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர் களே, ஏற்கனவே நஷ்டத்தில் நடந்து கொண்டிருக்கிற அரசு ஸ்டுடியோக்களில் கட்டணம் இல்லாமல் திரைப்படங்கள் எடுக்க அனுமதிப்பது என்பது எண்ணிப்பார்க்க முடியாத ஒன்று. ஆனால், அப்படி நல்ல படங்கள் எடுக்க முன்வருபவர்களுக்கு அரசு நியாய மான உதவிகளை வழங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கி றேன்.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, திரைப் படங்கள் எடுப்பதிலே நடப்புச் செய்திகளை எடுப்பது என்பது ஒன்று, அடுத்து, சில குறிப்பிட்ட கருத்துக்களைப் பரப்புவதற் காக எடுப்பது மற்றொன்று. அப்படிப்பட்ட கருத்துள்ள படங் களை எடுப்பதற்கான முயற்சி அரசு செய்திருக்கிறதா ? அதற் கென்று சில கொள்கைகளை வரையறுத்து வைத்திருக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, மாதந்தோறும் செய்திப் படங்கள் எடுப்பது என்கின்ற முறையில் திரைப்படங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. அவைகள் எல்லாம் நடைபெறுகின்ற நாட்டு நடப்புகளை மக்களுக்கு எடுத்துச் சொல்லக் கூடிய செய்திப் படங்கள். அதைத் தவிர, கருத்தை விளக்கக்கூடிய டாகுமெண்டரி என்ற பெயரில் மக்களுக்குத் தெரிவிப்பதற்காக சில திரைப் படங்கள் எடுப்பதுபற்றி சொல்லப் பட்டது. அதாவது குறிப்பாக, மதுவிலக்கு, தீண்டாமை, தொழிலாளர்கள் நலம், விவசாயிகள் பிரச்னை போன்ற பல்வேறு துறைகளைப் பற்றிய பொதுப் பிரச்னைகளை திரைப்படங்களாக எடுத்துக் காட்டுவது என்பது நடைமுறையில் இருந்து வருகிறது. இதை இன்னும் பலமானதாகவும், பயனுள்ளதாகவும் ஆக்க வேண்டுமென்று இந்த அரசு முடிவு எடுத்திருக்கிறது.

திரு. எஸ். ஜே. இராமசாமி: தலைவர் அவர்களே, இன்றைக்கு சினிமா உலகமானது நல்ல கருத்துக்களை, சீர்திருத்தக் கருத்துக்களை, நாட்டினுடைய நல்ல செய்திகளை, அரசாங்கச் செய்திகளை விளம்பரமாக செய்யக்கூடிய ஒரு பெரிய சாதனமாகும். இதிலே எந்தவிதமான சந்தேகமும் இல்லை. ஆனாலும் இந்த சினிமாத் துறையில் சர்க்காருக்கு நஷ்டம் ஏற்படுவதற்கான காரணம் என்ன? அதிலும் சினிமாத் துறையில் நல்ல அனுபவம் வாய்ந்த அமைச்சர் அவர்கள், இந்தத் துறையை நஷ்டமில்லாமல் காப்பாற்ற முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, அரசு இந்த சினிமாத் துறையை தொழிலாக நடத்தவில்லை. அரசுக்கு பல்வேறு முக்கியமான துறைகளில் ஏற்படுகின்ற செலவைப்போல், இந்தச் செய்திகளைப் பரப்பக்கூடிய இந்தத் துறைக்கும் செலவு ஏற்படுகிறது. ஆனால், அரசு நடத்துகின்ற ஸ்டூடியோவில் நஷ்டத்தைத் தவிர்க்க முடியுமா என்ற கேள்விக்கு, பதில் அளிக்கப்பட்டிருக்கிறது. அதை நஷ்டமில்லாமல் நடத்துவதற்கு, கவர்ச்சியான திட்டங்களை திரைப் படத்துறைக்கு வழங்குவதன்மூலம், இந்த நஷ்டத்தை தவிர்ப்பதற்கான முயற்சிதான் இப்போது எடுத்துக் கொண்டிருக்கின்ற காரியமாகும்.

பட்டப்படிப்பு வகுப்புகளில் மாணவர்கள் எண்ணிக்கை.

* 287 வினா—திரு. செ. சிவசாமி: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தமிழகத்திலுள்ள தனியார் கல்லூரிகளில், பட்ட வகுப்புகளில் ஒவ்வொரு இடப்பிரிவிலும் 20 மாணவர்களாவது இருக்கவேண்டுமென்ற விதி உள்ளதா?